*6*

# "வரவிருந்த நல்ல விஷயங்களின் நிழல்"

## (9:1–10:1)

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை மேலோட்டமாக வாசித்தலேகூட, இது பழைய உடன்படிக்கை - மோசேயின் நியாயப்பிரமாணம் - மற்றும் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை ஆகியவற்றிற்கு இடையிலான உறவைப் பற்றியதாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. அந்த உறவைப் பற்றிய பல உண்மைகளை இந்தப் புத்தகம் நமக்குப் போதிக்கிறது. (1) பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் புதிய உடன்படிக்கை மேன்மையானது என்பது, புதிய உடன்படிக்கையைக் காட்டிலும் பழைய உடன்படிக்கை தாழ்ந்ததாக உள்ளது என்று அர்த்தப்படுத்துகிறது. (2) பழைய உடன்படிக்கை நீக்கிப் போடப்பட்டுள்ளது; புதிய உடன்படிக்கை செயல்விளைவில்நிலைத்துள்ளது, மற்றும் அதன்கீழ்தான் நாம் வாழ்கிறோம். (3) பழைய உடன்படிக்கையில் இருந்து நாம் பாடங்கள் கற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் [எகிப்தில் இருந்து புறப்பட்ட] இஸ்ரவேல் மக்கள் பிரவேசிக்கத் தவறியது, அவர்கள் செய்தது போல் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கக் கூடாது என்று கிறிஸ்தவர்களை எச்சரிப்பதாக உள்ளது.

இந்தப் பாடத்தில் நாம், இந்த இரண்டு உடன்படிக்கைகளுக்கும் இடையிலுள்ள உறவு பற்றிய இன்னொரு சத்தியத்தை வலியுறுத்த விரும்புகிறோம்: *பழைய உடன்படிக்கையானது புதிய உடன்படிக்கையின் நிழலாக உள்ளது.* அந்த சத்தியத்தை மிகச்சிறப்பாக விளக்கப்படுத்தும் ஒரு வசனமாக எபிரெயர் 10:1 உள்ளது: "இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்,[1] வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது."[2] நியாயப்பிரமாணம் "வரவிருந்த நல்ல விஷயங்களின் நிழலாக" உள்ளது என்ற கருத்தைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறோம், மற்றும் அதன் பின்பு நாம், குறிப்பாக எபிரெயர் 9ல் இருந்து, கிறிஸ்துவின் ஏற்பாட்டை நியாயப்பிரமாணம் எவ்வாறு முன்னிழல் இட்டது என்று ஆழ்ந்து சிந்திக்க விரும்புகிறோம்.

### ஒரு "நிழலாக" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?

ஏவுதல் பெற்ற எழுத்தாளர், ஒரு "நிழலுக்கான" தமது குறிப்பினால்

அர்த்தப்படுத்தியது என்ன? பழைய உடன்படிக்கையானது, புதிய உடன்படிக்கையைக் குறிப்பிட்ட வழிகளில் முன்நிழலிட்டது - அதாவது முன்னுருவகப் படுத்தியது அல்லது மாதிரியாகப் பணியாற்றியது - என்று அவர் அர்த்தப் படுத்தினார். ஒருவேளை நீங்கள் ஒரு உயரமான சுவரின் அருகாக நடந்துசெல்லுகிறீர்கள் மற்றும் சுவரின் மறுபக்கத்தில் யாரோ நடந்துவரும் காலடி ஓசையைக் கேட்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அது யார் என்பதை உங்களால் காண முடிவதில்லை, எனவே அந்தத் தனிநபர் எவ்வாறு இருப்பார் என்பதை நீங்கள் அறிவதில்லை. சுவரின் முனையை நீங்கள் நெருங்குகிறபோது, உங்களுக்கு முன்பாக அந்த நபரின் நிழல் இருப்பதை நீங்கள் கண்ணோக்குவதாகக் கற்பனை செய்து பாருங்கள். அவரை நீங்கள் காண்பதற்கு முன்பேகூட, அவரது நிழலில் இருந்தே இப்போது நீங்கள் அவரைப் பற்றிய சில விஷயங்களை அறியமுடியும். அதுபோன்றே - கூரான விபரமின்றி விரிவான புறக்கோட்டு தோற்றமாக உள்ள - நியாயப்பிரமாணம், சில நிகழ்வுகளில் புதிய உடன்படிக்கை பற்றிய முன்கண்ணோக்கை அளிக்கிறது.

புதிய உடன்படிக்கையின் “நிழல்” என்ற வகையில் நியாயப்பிரமாணத்தின் சித்தரிப்பு மிகவும் குறிப்பாகப் பின்வரும் மூன்று கருத்துக்களை ஆலோசனையாகத் தருகிறது:

(1) புதிய ஏற்பாட்டின் *முன்னுரிமை.* கிறிஸ்து வந்து அவரது சபையைக் கட்டியெழுப்பியபோது, அவர் பழைய ஏற்பாட்டைப் பிரதி எடுக்கவில்லை; மாறாக ஆசரிப்புக்கூடாரம்தான், கிறிஸ்து கட்டியெழுப்பிய சபையின் பிரதியாக இருந்தது. ஆகையால், ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படுவதற்கு முன்பே, அந்த சபையானது தேவனுடைய மனதில் நிலவியிருந்தது.

(2) புதிய ஏற்பாட்டின் *மேன்மைத் தன்மை.* நிழலை ஏற்படுத்தும் பொருளானது, அது ஏற்படுத்தும் நிழலைக்காட்டிலும் அதிக மதிப்புடையதாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

(3) இரு உடன்படிக்கைகளின் *ஒத்ததன்மை.* ஒரு நிழலானது அதை ஏற்படுத்தும் பொருளுடன் ஒத்ததாக இருப்பதில்லை, ஆனால் அவை இரண்டிற்கும் இடையில் ஒத்ததன்மைகள் உள்ளன: அது போன்றே, பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டுடன் ஒத்திருப்பதில்லை, ஆனால் அது பல்வேறு வகைகளில் ஒத்ததன்மையைக் காண்பிக்கிறது. (அடுத்த பக்கத்தில் உள்ள வரைவட்டவணையைக் காணவும்.)

## நியாயப்பிரமாணம் எவ்வகையி[களி]ல் ஒரு நிழலாக இருந்தது?

நியாயப்பிரமாணம் எவ்வாறு “வரப்போகிற நன்மைகளின் நிழலாய்” இருந்தது என்பதற்கான சில வழிகளை நாம் கவனிப்போமாக.

| வரவிருந்த நன்மைகளின் நிழல் | |
|---|---|
| **நிழல்** | **பொருள்** |
| ***கை கழுவும் தொட்டி.*** *பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே, பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் முன்பு ஆசாரியர்கள் தங்கள் கைகளைக் கழுவிய தொட்டி ஒன்று இருந்தது.* | ***ஞானஸ்நானம்.*** *நமது பரிசுத்த ஸ்தலமான சபைக்குள் பிரவேசிப்பதற்கு, மக்கள் தங்கள் பாவங்களைக் கழுவ ஞானஸ்நானம் பெற வேண்டும்.* |
| ***தகன பலி பீடம்.*** *பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே, மிருகங்களைப் பலியிடும் பீடம் ஒன்று இருந்தது.* | ***சுயத்தைப் பலிசெலுத்துதல்.*** *கிறிஸ்தவர்கள் மிருகங்களை அல்ல, ஆனால் தங்களையே பலிசெலுத்த வேண்டும் (ரோமர் 12:1, 2).* |
| ***ஆசாரியர்கள்.*** *நியாயப்பிரமாணத்தின் கீழ் மனிதர்களின் ஒரு குறிப்பிட்ட குழுவே ஆசாரியர்களாக இருக்கத் தகுதி பெற்றிருந்தனர்.* | ***கிறிஸ்தவர்கள்.*** *ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு ஆசாரியராக இருக்கிறார் (1 பேதுரு 2:5, 9).* |
| ***பரிசுத்த ஸ்தலம்.*** *ஆசரிப்புக் கூடாரத்தினுள், ஆசாரியர்கள் மாத்திரம் செல்லக்கூடிய பரிசுத்த ஸ்தலம் ஒன்று இருந்தது.* | ***சபை.*** *சபையானது கிறிஸ்துவினால் கிரயம்கொள்ளப்பட்ட "பரிசுத்த ஸ்தலமாக" உள்ளது, இதில் "ஆசாரியர்கள்" (கிறிஸ்தவர்கள்) ஆராதித்து ஊழியம் செய்கின்றனர்.* |
| ***குத்துவிளக்கு.*** *பரிசுத்த ஸ்தலத்தின் உட்பகுதியில் வெளிச்சம் கொடுத்த குத்துவிளக்குத் தண்டு ஒன்று இருந்தது.* | ***தேவனுடைய வசனம்.*** *தேவனுடைய வசனமாகிய வேதாகமம், சபைக்கு வெளிச்சத்தையும் செல்லும் திசையையும் கொடுக்கிறது.* |
| ***தேவசமூகத்து அப்பம்.*** *பரிசுத்த ஸ்தலத்தில் "தேவசமூகத்து அப்பமேஜை" ஒன்று இருந்தது.* | ***கர்த்தருடைய இராப்போஜனம்.*** *சபையில் நாம், "கர்த்தருடைய போஜனபந்தியில் பங்கேற்கிறோம்" (1 கொரிந்தியர் 10:21).* |
| ***தூபமேடை.*** *பரிசுத்த ஸ்தலத்தில் தூபமேடை ஒன்று இருந்தது, இதிலிருந்து புகையானது மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றது.* | ***ஜெபம்.*** *ஜெபம் என்பது தூபத்துடன் ஒப்பிடப் பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 5:8), ஏனெனில் இது தேவனுடைய சமூகத்திற்கே செல்லுகிறது.* |
| ***திரை.*** *பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையில் ஒரு திரை அல்லது முக்காடு இருந்தது.* | ***மாம்சம்.*** *(காண்க எபிரெயர் 10:19, 20.) சபையில் உள்ளவர்களின் மாம்சமே அவர்களைப் பரலோகத்தில் இருந்து பிரிக்கும் "திரையாக" அல்லது முக்காடாக உள்ளது.* |
| ***மகாப்பரிசுத்த ஸ்தலம்.*** *மகாப்பரிசுத்த ஸ்தலம் என்பது ஆசாரிப்புக்கூடாரத்தின் மிகவும் உள்ளான பகுதியாக இருந்தது; அங்குதான் தேவன் தமது மக்களைச் சந்தித்தார்; பிரதான ஆசாரியர் மாத்திரமே அதற்குள் பிரவேசித்தார்.* | ***பரலோகம்.*** *கிறிஸ்து பரலோகத்திற்குள் பிரவேசித்தபோது, அங்குசெல்ல நாம் அவரைப் பின்பற்றுவதைச் சாத்தியமாக்கினார். அங்கு நாம் தேவனுடைய பிரசன்னத்தில் இருப்போம்.* |
| ***பிரதான ஆசாரியர்.*** *பழைய உடன்படிக்கையின்கீழ், ஆண்டுக்கு ஒருமுறை மாத்திரம் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்ற பிரதான ஆசாரியர் ஒருவர் இருந்தார்.* | ***கிறிஸ்து.*** *கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார், மற்றும் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஊழியம் செய்த பிரதான ஆசாரியர்களைக் காட்டிலும் அவர் மேன்மையானவராக இருக்கிறார். அவர் தமது சொந்த இரத்தத்தை எடுத்துக்கொண்டு, ஒரேதரமாகப் பரலோகத்திற்குள் பிரவேசித்தார்.* |
| ***மிருக இரத்தம்.*** *நியாயப்பிரமாணத்தின்கீழ் மிருகங்களின் இரத்தமே பாவங்களுக்கான ஒரே பலியாக இருந்தது.* | ***கிறிஸ்துவின் இரத்தம்.*** *கிறிஸ்து, சிலுவையில் தமது மரணத்தினால், பாவங்களை ஒரேதரமாக நீக்கிப்போட்டார்.* |

எபிரெயர் 9:1-14ல் நாம், பழைய உடன்படிக்கையின் பலி செலுத்தும் முறைமையானது, "வரவிருந்த நல்ல விஷயங்களின் நிழலாக" - இயேசு கிறிஸ்துவின் பலியினுடைய நிழலாக - இருந்தது என்று கற்றறிகிறோம்.

பின்வரும் கலந்துரையாடலுக்கு மேடையமைத்த, 9:1-5ல் உள்ள வார்த்தைகள், அதன் தோற்றகால வாசகர்களுக்கு, ஆசரிப்புக்கூடாரத்தின் உலகப்பிரகாரமான ஏற்பாடுகளை நினைவூட்டின. அந்த ஏற்பாடுகள் பின்வருவனவற்றைச் சித்தரிக்கின்றன: (1) பரிசுத்த ஸ்தலம்; (2) பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த பொருள்கள், இவற்றில் குத்துவிளக்குத்தண்டு, மேஜை மற்றும் பரிசுத்த அப்பம் ஆகியவை உள்ளடங்கின; (3) மகாப்பரிசுத்த ஸ்தலம்; மற்றும் (4) மகாப்பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த பொருள்கள், இவற்றில் தூபமேடை[3] மற்றும் உடன்படிக்கையின் பெட்டி (அதில் இருந்த பொருள்களுடன்), அதன்மீது இருந்த சேருபீமுடனான கிருபாசனம் ஆகியவை உள்ளடங்கின.

9:5ன் படி, இந்தப் பொருள்களின் தனிச்சிறப்பைப் பற்றி இன்னும் அதிகமானவை கூறப்பட முடியும். இருப்பினும், இந்தப் பாடத்தில், புதிய உடன்படிக்கையைப் பழைய உடன்படிக்கை எவ்வாறு நிழலிட்டது என்பதைப் பற்றி வேதவசனம் குறிப்பாகக் கூறுவது என்ன என்பதைப் பற்றி நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். ஏற்படுத்தப்படக் கூடிய ஒப்பீடுகள் சிலவற்றிற்கு, அடுத்த பக்கத்தில் உள்ள சிறிய வரைவட்டவணையைக் காணவும்.

எபிரெயர் 9ம் அதிகாரம், ஆசாரிப்புக் கூடாரத்தில் இருந்த பொருள்களின் தனிச்சிறப்பு பற்றி விரிவாக எடுத்துரைப்பதில்லை. இவற்றைப் பற்றிக் குறிப்பிட்ட பின்பு, நியாயப்பிரமாணம் என்ற நிழலின் பலி செலுத்தும் முறைமைகள் பற்றி 9:6-10ல் கவனக்குவிப்பு திரும்புகிறது.

### பலிசெலுத்தும் முறைமையின்கீழ் நடைபெற்றது என்ன?

நியாயப்பிரமாணம் செயல்விளைவில் இருந்த வேளையில், ஆசாரியர்கள் முறையாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றனர் (9:6). இந்தக் கிறிஸ்தவ யுகத்தில் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்களாக உள்ளனர் மற்றும் தேவனுக்குப் பலிகள் செலுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளனர் என்பதை நமக்கு நினைவூட்டிக் கொள்வதற்கு இங்கு சற்றே தாமதிக்கலாம். இந்த சூழ்நிலை தொடரும் வரையில் "பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று" 8 மற்றும் 9 ஆகிய வசனங்கள் காண்பிக்கின்றன. நியாயப்பிரமாணத்தின்கீழ் பரலோகத்திற்குச் செல்லும் மார்க்கம் திறக்கப்பட்டு இருக்கவில்லை. பிரதான ஆசாரியர் மாத்திரம் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றார், மற்றும் அவர் பாவங்களுக்காகப் பலிசெலுத்த மிருகங்களின் இரத்தத்துடன் ஆண்டுக்கு ஒரு முறை ஒரு நாளில் மாத்திரம் அங்கு சென்றார் (9:7).

இந்தப் பலிகளுடன் தொடர்புடைய வகையில் இருந்த பிரச்சனை என்ன? 9ஆ மற்றும் 10 வசனங்களில், இந்த பலிகள் பூரணமற்றவையாக இருந்தன என்பதை எழுத்தாளர் காண்பித்தார்; அவைகள் பாவங்களை நீக்கிப்போட இயலாதவைகளாக இருந்தன ("ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்").

9:11-14ல் நமது கவனம், நிழலில் இருந்து பொருளுக்கு, லேவியத்துவ

பலிசெலுத்தும் முறைமையின் நிறைவேற்றம் என்ற உண்மைநிலைக்குத் திருப்பப்படுகிறது.[4]

**இப்போது நடைபெறுவது என்ன?**

இப்போது நியாயப்பிரமாணம் கடந்து சென்றுள்ள நிலையில், மக்கள் தேவனை ஆராதிக்க வேண்டிய வழியில் உள்ள முக்கியமான மாற்றங்களைக் காணுகிறோம். (1) மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ், ஒரு பிரதான ஆசாரியர் இருந்தார்; இன்று கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் (9:11). (2) மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் ஒரு ஆசாரிப்புக்கூடாரம் இருந்தது; இன்றைய நாட்களில் "பெரிதும் உத்தமுமான கூடாரம்" ஒன்று உள்ளது (9:11). (3) மோசேயின் யுகத்தில், ஒரு பரிசுத்த ஸ்தலம் இருந்தது (9:12ல் "பரிசுத்த ஸ்தலம்" [இது தமிழ் வேதாகமத்தில் "மகா பரிசுத்த ஸ்தலம்" என்றே உள்ளது] என்பது மகாப்பரிசுத்த ஸ்தலத்தையே உண்மையில் குறிக்கிறது). இயேசு பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்; அவர் பரலோகத்திற்கே சென்றார். (4) நியாயப்பிரமாணத்தின்கீழ், பாவங்களுக்கான பலிகள் செலுத்தப்பட்டன; ஆனால் கிறிஸ்துவின் இரத்தமே புதிய உடன்படிக்கையின் பலியாக உள்ளது (9:12). (5) முந்திய யுகத்தில், பலிகள் மீண்டும் மீண்டும் செலுத்தப் பட்டன; இந்த யுகத்தில் கிறிஸ்து, எல்லாக் காலத்திற்கும் "ஒரேதரமாக" ஒரே பலியை மாத்திரம் செலுத்தினார் (9:12).

*இதனால் ஏற்பட்ட விளைவு என்ன?* கிறிஸ்துவினுடைய பலியின் காரணமாக, நித்திய மீட்பு உண்டுபண்ணப் பட்டது (9:12). பழைய உடன்படிக்கை சிலவற்றை (சடங்காச்சாரச் சுத்திகரிப்பை; 9:13) நிறைவேற்றியது, ஆனால் புதிய உடன்படிக்கை எல்லாவற்றையும் (உண்மையான சுத்திகரிப்பை; 9:14) நிறைவேற்றியது. நாம் "ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்கிறோம்" என்பது (9:14) கிறிஸ்துவின் பூரணமான பலியின் இன்னொரு விளைவாக இருக்க வேண்டும்.

## உடன்படிக்கையின் உறுதிப்பாடு

புதிய உடன்படிக்கையின் நிழலாக பழைய உடன்படிக்கை உள்ளது என்பதற்கு இன்னொரு வழி எபிரெயர் 9:15-21ல் காணப்படுகிறது. புதிய உடன்படிக்கையின் உறுதிப்பாட்டினுடைய நிழலாகப் பழைய உடன்படிக்கையின் உறுதிப்பாடு உள்ளது என்று இவ்வசனங்களில் நாம் கற்றறிகிறோம்.

மிருகங்களின் இரத்தம் நிறைவேற்றக் கூடாதிருந்தவற்றைக் கிறிஸ்துவின் இரத்தம் நிறைவேற்றச் செயல்விளைவுடையதாக இருக்கிறது; இது மாம்சத்தை மாத்திரமல்ல, ஆனால் மனச்சாட்சியையும் சுத்திகரிக்க முடியும். வேறு எவ்வாறு இது செயல்விளைவுள்ளதாக இருக்கிறது? 9:15ன் படி இது, முதலாம் உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட மீறுதல்களில் இருந்து மக்களை மீட்கிறது மற்றும் இயேசுவைப் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக்குகிறது.

இயேசு புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருத்தலுடன் அவரது மரணம் எவ்வாறு தொடர்பு படுத்தப் படுகிறது? உயில் ஒன்றை எழுதியவரின் மரணம், அந்த உயிலைச் செயல்விளைவுடையதாக ஆக்குவதைப் போன்றே,

இது [இயேசுவின் மரணம்] உடன்படிக்கையை சாத்தியமானதாக

ஆக்குகிறது.[5]

இந்தக் கருத்தை விவரிப்பதற்குப் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் மறுகண்ணோட்டம் இடப்படுகின்றன. முதலாம் உடன்படிக்கை இரத்தத்தைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டது (9:18-21). யாத்திராகமத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளபடி, தேவனுடன் மக்கள் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டனர் (யாத்திராகமம் 19). பின்பு தேவன் கட்டளைகளைக் கொடுத்தார் (யாத்திராகமம் 20-23). மக்களிடத்தில் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டது, மற்றும் அதைக் கடைப்பிடிக்க அவர்கள் மீண்டும் ஒப்புக் கொண்டனர். அடுத்ததாக, உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது என்பதற்கு அடையாளமாக, மக்கள் மீது இரத்தம் தெளிக்கப் பட்டது (யாத்திராகமம் 24:8). அந்தச் செயலானது உடன்படிக்கையின் மீது நிறைவான முடிவுப்பணிகளைச் செய்தது. அந்த நாளில் இருந்து தேவனும் மக்களும் உடன்படிக்கையினால் இணைக்கப் பட்டிருந்தனர். அவ்வாறே நாமும், இரத்தத்தினால் கிரயம்கொள்ளப் பட்ட ஒரு உடன்படிக்கையின் கீழ் வாழ்கிறோம் (காண்க மத்தேயு 26:28). நம்முடன் கிறிஸ்து செய்துள்ள உடன்படிக்கையானது, சிலுவையின் மீது அவரது மரணத்தினால் இரத்தத்தைக் கொண்டு உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

எபிரெயர் 9:21-28 என்ற அடுத்த பகுதியில், புதிய உடன்படிக்கையின்கீழ் சுத்திகரிப்பிற்கு, பழைய உடன்படிக்கையினால் அளிக்கப்பட்ட சுத்திகரிப்பு ஒரு நிழலாக இருந்தது என்று நாம் கற்றறிகிறோம்.

முதலாவது, 21 மற்றும் 22 ஆகிய வசனங்கள், பழைய உடன்படிக்கையின்கீழ், ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பொருள்களின் சுத்திகரிப்பில் இரத்தம் உள்ளடங்கி இருந்தது என்ற உண்மையைப் பற்றிப் பேசுகின்றன. இரத்தம் இல்லாமல் சுத்திகரிப்பு இருந்ததில்லை.

இரண்டாவது, ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பொருள்கள் பரலோகத்துப் பொருள்களின் பிரதிகள் என்ற வகையில் பேசப்படுகின்றன (9:23). உண்மை நிலைகளாக இருப்பவை என்ன? புதிய உடன்படிக்கையின் விஷயங்களே - உதாரணமாக சபையும் அதன் ஆராதனையும் - ஆகும்.

மூன்றாவது, உண்மையான சுத்திகரிப்பைச் செயல்விளக்கப்படுத்தும் மேன்மையான பலிகளைப் பற்றி நமக்குக் கூறப்படுகிறது. பழைய உடன்படிக்கையின் பலிகள் புதிய உடன்படிக்கையின் பூரணமான பலியுடன் எவ்வாறு ஒப்பிடப்பட்டு நேரெதிராக ஒப்பிடப்படுகின்றன என்பதை இந்தப் பக்கத்தில் உள்ள வரைவட்டவணையில் காணவும்.

நமது வசனப் பகுதியின், எல்லாவற்றையும் உள்ளிட்ட [முழுமையான] பாடம் என்னவாக உள்ளது? நாம் மேன்மையான உடன்படிக்கையைக் கொண்டுள்ளோம், இதன்கீழ் நாம் மேன்மையான பலியைக் கொண்டு சுத்திகரிக்கப் படுகிறோம். ஆகையால் நாம், அதை (விசேஷமாக, முதல் வாசகர்களின் விஷயத்தில், யூதத்துவத்திற்குத் திரும்பச் செல்லுதலினால்) கைவிடக்கூடாது. மற்றும் நாம் நன்றிநிறைந்தவர்களாக இருக்க வேண்டும். நாம் அறிந்துள்ளவற்றை அறிந்துள்ள நிலையில், நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்வதில்லை என்பதால் நாம் மகிழ்வடைய வேண்டும். அக்கறையின்றி தனியாக நிற்கும் ஒருவரை அல்ல, ஆனால் நமக்காக மரித்து தமது சொந்த இரத்தத்தின் பலியை பரலோகத்தினுள்ளேயே எடுத்துக்கொண்டு சென்ற ஒரு மகாப்பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் என்பதால் நாம் தேவனுக்கு நன்றி

*நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். இப்போது இரட்சிப்பு நம்முடையது என்று நாம் அகம் மகிழ முடியும்!*

## *முடிவுரை*

*9ம் அதிகாரம், 27 மற்றும் 28 ஆகிய வசனங்களில் ஏற்புடைய முடிவுரை ஒன்றைக் கொண்டுள்ளது. இயேசுவின் அனுபவத்தை விவரிப்பதற்கு, மனித அனுபவம் பயன்படுத்தப் பட்டுள்ளது. மனிதர் மரித்தாக வேண்டும் மற்றும் அதன் பின்பு நியாயத்தீர்ப்பிற்கு வந்தாக வேண்டும். அவ்வாறே இயேசுவும் மரித்தார் மற்றும் (அவரது இரண்டாம் வருகையில்) அவர் நியாயத்தீர்ப்பிற்கு வருவார். அவர் மறுபடியும் வருகிறார் என்பதை அறிந்த நிலையில், அவருக்கு உண்மையானவர்கள் "அவருக்காக ஆவலோடு காத்திருக்கின்றனர்." அவரது மறுவருகைக்கு நீங்கள் ஆவலோடு காத்திருக்கிறீர்களா?*

---

*குறிப்புகள்*

*[1]"வரப்போகிற நன்மைகளின்" என்ற சொற்றொடர் புதிய உடன்படிக்கையைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் நிலைப்பாட்டில் இருந்து கண்ணோக்குகையில், அந்த "நன்மைகள்" இனி வரப்போகிறவைகளாக இருந்தன; நமது கண்ணோக்கில் இருந்து பார்க்கையில், அவைகள் ஏற்கனவே வந்திருக்கின்றன. எனவே நமக்கு, அவைகள் "வந்திருக்கிற நன்மைகளாக" உள்ளன. [2]நியாயப்பிரமாணம் ஒரு நிழலாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கும் மற்ற வசனங்களில், 9:9, 11, 23, 24 ஆகியவை உள்ளடங்குகின்றன. [3]தூபமேடை உண்மையில் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது; இந்த மேடையில் இருந்து தூபப்புகை மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றது என்பதால், இங்கு இது மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்கு உரியது என்ற வகையில் பேசப்படுகிறது. [4]இரு உடன்படிக்கைகளிலும் பலிகள் எங்கு செலுத்தப்பட்டன (வசனம் 11), பலிசெலுத்தியது யார் (வசனம் 11), செலுத்தப்பட்ட பலிகளின் வகைகள் (வசனம் 12) மற்றும் பலிகளின் செயல்விளைவுகள் (வசனங்கள் 9ஆ, 13-15) ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளைக் கவனிக்கவும். [5]9:16, 17ல் "உடன்படிக்கை" என்ற மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை, தேவன் இஸ்ரவேல் மக்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை போன்றது என்ற வகையில், ஒரு உடன்படிக்கையை அல்லது ஒப்பந்தத்தைக் குறிக்க முடியும். இருப்பினும் இதே வார்த்தை, "கடைசி உயில் மற்றும் சாசனம்" என்ற சொல்விளக்கத்தின்படி, ஒரு "உயிலை" அல்லது "சாசனத்தை" குறிப்பிட முடியும். எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வார்த்தை வழக்கமாக "உடன்படிக்கை" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இங்கு இது "உயில்" அல்லது "சாசனம்" என்று அர்த்தப் படுகிறது. [தமிழ் வேதாகமத்தில் இவ்வசனங்களில் இவ்வார்த்தை "மரணசாதனம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது]; இருப்பினும் இது "மரணசாசனம்" என்று இருந்திருக்க வேண்டும்.*

| **புதியது (பொருள்)** | **பழையது (நிழல்)** |
| --- | --- |
| கிறிஸ்து பிரவேசித்தார் *(9:24).* | பிரதான ஆசாரியர் பிரவேசித்தார் *(9:25).* |
| மெய்யான பரிசுத்த ஸ்தலம் *(9:24).* | கைகளால் செய்யப்பட்டதாயிருந்த பரிசுத்த ஸ்தலம், மெய்யான ஒன்றின் பிரதி *(9:24).* |
| ஒரே தரம் *(9:12.28).* | மீண்டும் மீண்டும் *(9:25; 10:1).* |
| கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்துடன் *(9:26).* | தமது சொந்தமாயிராத இரத்தத்துடன் *(9:25).* |

***புதிய உடன்படிக்கையின் பலி, பழைய உடன்படிக்கையின் பலியில் முன்னிழல் இடப்பட்டது***